கவன ஈர்ப்புகள்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் ஏலம் போடுவதிலும் தமிழகத்திற்குத் தேவையான பிரதிநிதித்துவம் வாங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களை நாம் ஏலக்காய் நல வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

(முற்பகல் 10-30)

24. உசிலம்பட்டி தாலுகா விக்கிரமங்கலம் கிராம மேல்நிலை குடிநீர் தொட்டி செயல்படாதது.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தாலுகா விக்கிரமங்கலம் கிராமத்தில் உள்ள மேல்நிலைத் தொட்டி செயல்படாததால் அப்பகுதி மக்கள் வறட்சிக்காலமான இந்த நேரத்தில் குடிநீருக்காகக் கஷ்டப்படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

விக்கிமரங்கலம் கிராமத்தில் 1969ஆம் ஆண்டில் ஒரு மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டு தெருக்குழாய்களின் மூலம் கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. கடந்த ஆண்டில் பருவமழை தவறியதால் ஏற்பட்ட வறட்சி காரணமாக கிணற்றிலுள்ள நீர் குறைந்து விட்டதால் மேல்நிலைத் தொட்டியிலுள்ள நீரைத் தெருக் குழாய்களின் வழியாக உபயோகித்தால், நீர் வீணாவதைத் தடுக்கும் வகையில், மக்கள் தாங்களாகவே கிணற்றிலுள்ள தண்ணீரை வாளிகளை உபயோகித்து பயன்படுத்தி வருகின்றனர். மேலும் தற்போதைய குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் மாற்று வழியாக மேற்படி மேல்நிலை குடிநீர் கிணறு ஆழப்படுத்தப்பட்டு, தற்பொழுது 3 அடி தண்ணீருக்கு மேல் உள்ளது.

மேலும் கடந்த ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வாரியத்தினால் ஆழ்துளை கிணறொன்று அமைக்கப்பட்டு, குழாய்கள்அமைக்கும் பணி தற்போது முடிவுறும் நிலையிலுள்ளது. இப்பணி இன்னும் 15 தினங்களில் முடிக்கப்பெற்று மேல்நிலைத் தொட்டியின் வழியாகக் கிராம மக்களுக்குப் போதுமான குடிநீர் விநியோகிக்கப்படும்.

கவன ஈர்ப்புகள்

[டாக்டர் கா. காளிமுத்து]

இது தவிர, இக்கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிக்கொன்றும், பிற பகுதியினருக்கு ஒன்றுமாக இரண்டு கையிறைப் பான்கள் உபயோகத்தில் உள்ளன.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விக்கிரமங்கலம் கிராமம் சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியாக இருக்கிறது. அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற குழாய் போடும் பணி அத்தனையும் மிகவும் காலதாமதமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் முக்கியமாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்த வறட்சியான நிலையில், கூடிய விரைவிலே அந்தக் குழாய்களைப் போடும் பணியை முடுக்கி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ? அந்தப் பணி நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : : நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

(25) கூடலூர் பேரூராட்சி பகுதிகளில் குடிநீர் வழங்குதல்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' ' கூடலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக குடிநீர் வழங்கப்படாமல் இருப்பது பற்றியும், இதனால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறட்சியால் கோக்கால், அலஹலா போன்ற நீரோடைகள் வறண்டு விட்டதால் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் தேதியிலிருந்து தினமும் பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் தடை ஏற்பட்டது. கூடலூர் நகர எல்லையிலுள்ள தொரப்பள்ளி ஆற்றிலிருந்து ஒரு லாரி மூலம் தண்ணீர் கொண்டு வந்து 60,000 லிட்டர் குடிநீர், ஹெல்த் கேம்ப் பகுதியில் உள்ள குடிநீர் தேக்கத்தில் விடப்பட்டு ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் சுற்று முறையில் மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.